# Verified RealEstate™

Your trusted partner for buying, selling, and managing property, ensuring hassle-free service with 100% transparency.

3/350/2 Mettukuppam,
OMR Thoraipakkam,
Chennai, India

hello@verified.realestate
+91 9996 12 9996

**Official Property Record**

Digitally Verified Record - Powered by Verified RealEstate™



நகர் ஊரமைப்புத் துறை
நகர் ஊரமைப்பு துணை இயக்குநர்(பொ), ஈரோடு மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம்,
ஈரோடு அவர்களின் நடவடிக்கைகள்
முன்னிலை : திருமதி ஆ.மணிமேகலை, பி.இ.,

ந.க.எண் . 145/2020 ஈமா2 நாள் : 04.08.2020

பொருள் : TNSCB கட்டிடம் - நகர் ஊரமைப்புத் துறை – ஈரோடு மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம் - ஈரோடு மாவட்டம் - அந்தியூர் வட்டம் - அம்மாபேட்டை பேரூராட்சி மற்றும் அம்மாபேட்டை 'அ'கிராமம் - புல.எண்.110/5-இல் மனைப்பரப்பு 12150.0ச.மீ பரப்பளவில் உத்தேச பிளாக் 1 முதல் 11 வரையில் தரை தளம் + 3 தளங்களில் 464 குடியிருப்புகள் கொண்ட கட்டிடத்திற்கு கட்டிட அனுமதி வழங்குதல் - குறித்து.

பார்வை :
1. செயல் அலுவலர், அம்மாபேட்டை பேரூராட்சி கடிதம் ந.க.எண்.155/2020 நாள். 28.07.2020
2. நிர்வாக பொறியாளர், தமிழ்நாடு குடிசை மாற்று வாரியம், திருப்பூர் கோட்டம், திருப்பூர் அவர்களின் விண்ணப்பம் நாள்.இல்லை மற்றும் இணையதள விண்ணப்பம் எண்.202000402032512 நாள்: 10.04.2020
3. அரசாணை எண்.79.வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை ந.வ.4(3). நாள்.04.05.2017
4. அரசாணை எண்.18 வீட்டுவசதி மற்றும் நகர்புற வளர்ச்சி துறை UD4(3) துறை நாள்.4.02.2019
5. அரசாணை எண்.16 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்.31.01.2020
6. நகர் ஊரமைப்பு ஆணையர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண்.4367/2019/BA2 நாள்.06.11.2019
7. மாவட்ட அலுவலர், தீயணைப்பு மீட்புப்பணித் துறை, ஈரோடு மாவட்டம் தடையின்மைச் சான்று மூ.மு.எண்.4841/இ1/2020 நாள்.16.06.2020
8. இவ்வலுவலக கேட்பு கடிதம் இதே எண். நாள்.30.07.2020
9. மனுதாரர் செலுத்துச்சீட்டு பெறப்பட்ட நாள்.03.08.2020

*******

**உத்தரவு**

ஈரோடு மாவட்டம், அந்தியூர் வட்டம், அம்மாபேட்டை பேரூராட்சி மற்றும் அம்மாபேட்டை 'அ' கிராமம், க.ச.எண்.110/5-இல் 12150.0ச.மீ பரப்பு கொண்ட மனையிடத்திற்கு "A முதல் D வரை" என எல்லையிட்டு மனை ஒப்புதல் எண். ம.வ/ஈமா.எண்.04/2020 என எண்ணிடப்பட்டும், அம்மனையில் உத்தேச பிளாக் 1 முதல் 11 வரையில் தரை தளம் + 3 தளங்களில் 464 குடியிருப்புகள் கட்டிட வரைபடங்களுக்கு க.வ/ஈ.மா எண்.04 'அ,ஆ,இ,ஈ'/2020 என எண்ணிடப்பட்டும், கீழ்க்கண்ட சிறப்பு நிபந்தனைகள் மற்றும் நிபந்தனைகளின் கீழ் தொழில்நுட்ப முன்இசைவு வழங்கப்படுகிறது.

04/08/2020
EXECUTIVE ENGINEER
TNSCB, Tirupur Division

<u>உத்தேசக் கட்டிடப் பரப்பு</u>

மனையின் பரப்பு : 12150.00 ச.மீ

| தளங்கள் | FSI sqm | Non FSI sqm | Total Sqm | உபயோகம் |
|---|---|---|---|---|
| Block -1 | | | | |
| தரைத்தளம் | 589.90 | - | 589.90 | 16 குடியிருப்புகள் |
| முதல்தளம் | 589.90 | - | 589.90 | 16 குடியிருப்புகள் |
| இரண்டாம் தளம் | 589.90 | - | 589.90 | 16 குடியிருப்புகள் |
| மூன்றாம் தளம் | 589.90 | - | 589.90 | 16 குடியிருப்புகள் |
| டெரஸ் தளம் | -- | 14.45 | 14.45 | மாடிப்படி |
| **மொத்தம்** | **2359.60** | **14.45** | **2374.05** | 64 குடியிருப்புகள் |
| Block -3, 5, 7, 9, 11 | | | | |
| தரைத்தளம் | 442.72 | -- | 442.72 | 12 குடியிருப்புகள் |
| முதல்தளம் | 442.72 | -- | 442.72 | 12 குடியிருப்புகள் |
| இரண்டாம் தளம் | 442.72 | -- | 442.72 | 12 குடியிருப்புகள் |
| மூன்றாம் தளம் | 442.72 | -- | 442.72 | 12 குடியிருப்புகள் |
| டெரஸ் தளம் | -- | 14.45 | 14.45 | மாடிப்படி |
| **மொத்தம் 5 பிளாக்குகள்** | 1770.88 x 5 Block = **8854.40** | 14.45 x 5 Block = **72.25** | 1785.33 x 5 Block = **8926.65** | 48 குடியிருப்புகள் x 5 பிளாக்குகள் = 240 குடியிருப்புகள் |
| Block -2,4,6,8,10 | | | | |
| தரைத்தளம் | 295.54 | -- | 295.54 | 8 குடியிருப்புகள் |
| முதல்தளம் | 295.54 | -- | 295.54 | 8 குடியிருப்புகள் |
| இரண்டாம் தளம் | 295.54 | -- | 295.54 | 8 குடியிருப்புகள் |
| மூன்றாம் தளம் | 295.54 | -- | 295.54 | 8 குடியிருப்புகள் |
| டெரஸ் தளம் | -- | 14.45 | 14.45 | மாடிப்படி |
| **மொத்தம் 5 பிளாக்குகள்** | 1182.16 x 5 Block = **5910.80** | 14.45 x 5 Block = **72.25** | 1196.61 x 5 Block = **5983.05** | 32 குடியிருப்புகள் x 5 பிளாக்குகள் = 160 குடியிருப்புகள் |
| நிகர மொத்தப் பரப்பு | **17124.80** | **158.95** | **17283.75** | 464 குடியிருப்புகள் |

FSI Area : 17124.80 Sqm

OSR ARea : 1261.68 sqm

மனுதாரரால் நன்னிலை வரிக் கட்டணம் - Rs.46700/- SBI Treasury, Erode நாள். 03.08.2020 -ல் அரசுக்கு செலுத்தப்பட்டுள்ளது.

04/09/2020

**EXECUTIVE ENGINEER**
**TNSCB, Tirupur Division**

<u>சிறப்பு நிபந்தனைகள் :</u>

1. "நகர் ஊரமைப்புத் துறை சட்டப்பூர்வமாக தொழில்நுட்ப அனுமதி/திட்ட அனுமதி அளிப்பதன் மூலம் விண்ணப்பதாரரின் பேரில் உள்ள நில உரிமையை உறுதிப்படுத்தவில்லை. தொழில் நுட்ப அனுமதி/திட்ட அனுமதி அளிப்பதற்கு முன்பு விண்ணப்பதாரரின் விண்ணப்பத்துடன் சமர்ப்பித்த ஆவணங்களில் (கிரையப்பத்திரம், குத்தகை பத்திரம், பட்டா, தானப்பத்திரம் பொது அதிகார பத்திரம் மேலும் பல) விண்ணப்பதாரர் வளர்ச்சி செய்ய உரிமையுள்ளதா என்று மட்டுமே சரிபார்க்கப்படுகிறது. அதன்மூலம் முதற்கட்டமாக விண்ணப்பதாரருக்கு வளர்ச்சி செய்ய உரிமை உள்ளதா என்று பார்க்கப்படுகிறது.

சொத்தினை வாங்க விரும்பும் எந்த நபரும், விண்ணப்பதாரருக்கு சொத்தின்மீது உள்ள உரிமையை தனியாக உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும். மேலும் அதன் மேல் வேறு யாரேனும் தனி நபர் உரிமை கோரினால் அவர்கள் அதனை பொருத்தமான தகுதியுள்ள நீதிமன்றத்தின் முன் தீர்த்துக்கொள்ளலாம். இதனை முடிவு செய்ய நகர் ஊரமைப்புத் துறை பொருத்தமான அமைப்பு அல்ல."

2. "கட்டுமானங்கள் நடைபெறும் இடத்தில், அரசாணை எண். 18 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (MAWS) துறை நாள். 04.02.2019 கீழ் வெளியிடப்பட்ட Tamil Nadu Combined Development and Building Rules 2019–ன்படி தளப்பரப்பு விகிதம் (FSI) திறவிடங்கள் (Set back) வாகன நிறுத்தம் மற்றும் பல விபரங்கள் அடங்கிய பலகை நிறுவப்பட்டிருக்க வேண்டும்."

3. மனையிட வரைபடத்தில் காண்பிக்கப்பட்ட பூங்கா திறவிட (OSR) பரப்பு 1261.68 ச.மீ பகுதியினை உள்ளாட்சிக்கு தானமாக ஒப்படைக்கப்பட்ட பின்னரே உள்ளாட்சியால் ஒப்புதல் அளிக்கப்பட வேண்டும்.

4. மனையிடத்தில் கிழக்கு எல்லையை ஒட்டி பள்ளமாக உள்ள இடம் நிறவப்படவேண்டும்.

<u>நிபந்தனைகள்</u>

1) உத்தேச குடியிருப்புக் கட்டிடம் அரசாணை எண். 18 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (MA.I) துறை நாள். 04.02.2019 கீழ் வெளியிடப்பட்ட Tamil Nadu Combined Development and Building Rules 2019 விதிகளுக்கு உட்பட்டு கட்டிடம் கட்டப்பட வேண்டும்.

2) தற்போது ஒப்புதல் பெறப்பட்ட வரைபடத்திற்கு மாறாக கட்டிடத்தில் எந்தவித மாற்றமும் செய்தல் கூடாது. மாற்றங்கள் செய்வதாக இருந்தால் இத்துறையின் முன் அனுமதி பெறப்பட வேண்டும்.

3) வரைபடத்தில் உத்தேசிக்கப்பட்டவாறு வாகனம் நிறுத்துமிடம் அந்த பயனுக்காகவே பயன்படுத்தப்பட வேண்டும்.

4) வரைபடத்தில் காட்டியுள்ளவாறு மழைநீர் சேகரிப்பு கட்டமைப்பு அமைக்கப்பட வேண்டும்.

5) கட்டுமானத்தில் விதிப்படி தேவையான அளவுக்கு தீத்தடுப்பு மற்றும் தீயணைப்பு சாதனங்கள் அமைக்கப்பட வேண்டும்.

6) விண்ணப்பதாரர்/அபிவிருத்தியாளர் மற்றும் கட்டிட வடிவமைப்பாளர்/கட்டிட உரிமம் பெற்ற அளவர் மற்றும் கட்டுமானப் பொறியாளர் ஆகியோர் கட்டுமானப் பணியின் போது ஒருங்கிணைந்து செயலாற்றி கட்டிடத்தின் உறுதித் தன்மை, கட்டுமானத் தரம் ஆகியவற்றை உறுதி செய்து கொள்ள வேண்டும்.

04/09/2020

EXECUTIVE ENGINEER
TNSCB, Tirupur Division

7) கட்டிடம் கட்டப்படும் போது அரசு அங்கீகாரம் பெற்ற மின் ஒப்பந்ததாரர் மூலம் ஒயரிங் செய்யப்பட வேண்டும்.

8) பார்வை 6-ல் கண்ட அரசாணையின்படி உத்தேச கட்டிட ஒப்புதல் விவரங்கள், அமைவிட விவரங்கள், உரிமையாளர், உள்ளாட்சி. பொறியாளர்கள் விவரங்கள் அடங்கிய 60cm x 120cm அளவு கொண்ட தகவல்பலகை கட்டுமானம் நடைபெறும் இடத்தில் வைக்கப்பட வேண்டும்.

9) உத்தேச கட்டிடத்தில் இருந்து வெளியேறும் கழிவு நீர் தனியார் வாகனங்கள் மூலம் வெளியேற்றவும், பாதுகாக்கப்பட்ட குடிநீர் வசதிகள் மற்றும் இதர தேவைக்கான நீர் வசதிகள் ஆகியவை மனுதாரர் தனது சொந்த செலவில் செய்து தர வேண்டும்.

10) உத்தேச கட்டிடத்திற்கு Solar Water Heating System அமைக்கப்பட வேண்டும். மேலும் மொத்த டெரஸ் தளப்பரப்பில் 1/3 பரப்பிற்கு Solar photo voltaic panel உத்தேசிக்கப்படவேண்டும்

11) பரிசீலனைக்கு சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்கள் சரியானவை இல்லை என அறியப்பட்டால் எவ்வித முன்னறிவிப்புமின்றி இத்துறையால் அனுமதி ரத்து செய்யப்படும்.

அங்கீகரிக்கப்பட்ட வரைபடங்கள் மேல்நடவடிக்கைக்காக இத்துடன் இணைத்து அனுப்பி வைக்கப்படுகிறது.

உள்ளாட்சியால் மேற்படி கட்டுமானத்திற்கு உரிமம் வழங்கிய பின்னர், அதன் விபரத்தினை இவ்வலுவலகத்திற்கு தெரிவிக்கும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறது. ஒப்புதலளிக்கப்பட்ட வரைபடங்கள் பெற்றுக் கொண்டமைக்கு மறுதபாலில் ஒப்புகைசான்று அளிக்குமாறும் கேட்டுக்கொள்ளப்படுகிறது.

நகர் ஊரமைப்பு துணை இயக்குநர்(பொ),
மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம்,
ஈரோடு மாவட்டம்.

**இணைப்பு**

அங்கீகரிக்கப்பட்ட வரைபடங்கள் - இரு தொகுப்புகள்
(மனை ஒப்புதல் எண்.ம.வ./ஈமா எண்.04/2020 மற்றும்
கட்டிட வரைபட அனுமதி எண்.கவ/(ஈமா)எண். 04 'அ.ஆ.இ.ச'/2020

பெறுநர் :
செயல் அலுவலர்,
அம்மாபேட்டை பேரூராட்சி,
அந்தியூர் வட்டம்,
ஈரோடு மாவட்டம்.

நகல் :
நிர்வாகப் பொறியாளர்,
தமிழ்நாடு குடிசை மாற்று வாரியம்,
திருப்பூர் கோட்டம்
188 சக்தி நகர்,
போயம்பாளையம் பிரிவு,
பூலுவம்பட்டி அஞ்சல்,
திருப்பூர்-641 002.

EXECUTIVE ENGINEER
TNSCB, Tirupur Division

ஈரோடு மாவட்டம், அம்மாபேட்டை பேரூராட்சி செயல் அலுவலர் அவர்களின் நடவடிக்கைகள்
முன்னிலை: திரு.மு.சுரேஷ்குமார்

க.ம.எண்.155/ 2020

நாள்: 18.08.2020

பொருள்: அடுக்குமாடி குடியிருப்பு கட்டிடம் – ஈரோடு மாவட்டம் – அந்தியூர் வட்டம் – அம்மாபேட்டை பேரூராட்சி – அம்மாபேட்டை 'அ' கிராமம் க.ச.எண்.110/5–ல் அமையும் 12150 ச.மீ பரப்பளவு கொண்ட மனையிடத்தில் தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியத்தின் மூலம் 11 பிளாக்குகளில் 464 குடியிருப்புகள் கொண்ட கட்டிடம் கட்ட வரைபடத்தின்படி அனுமதி வழங்கி ஆணையிடப்படுகிறது.

பார்வை: 1) அரசாணை எண்.295 (தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை) நாள்.17.12.2013.
2) ஈரோடு மாவட்ட நகர் ஊரமைப்பு துணை இயக்குநர் (பொ), ஈரோடு அவர்களின் ந.க.எண்.145/2020/ ஈமா2, நாள்.04.08.2020.
3) திருப்பூர் கோட்ட தமிழ்நாடு குடிசை மாற்று வாரியம், திருப்பூர் செயற்பொறியாளர் அவர்களின் கடித எண்.366/இநிஉ/தி.கோ/2019, நாள்.13.08.2020.

* * * * * * * *

ஆணை:

ஈரோடு மாவட்டம், அந்தியூர் வட்டம், அம்மாபேட்டை பேரூராட்சி, அம்மாபேட்டை "அ" கிராமம், புல எண்.110/5–ல் அமையும் 12150 ச.மீ பரப்பளவு கொண்ட அரசு தீர்வை ஏற்படாத கரடு புறம்போக்கு நிலத்தில் தமிழ்நாடு குடிசை மாற்று வாரியத்தினால் கட்டப்பட உள்ள தரைதளம் +3 தளங்களில் 11 பிளாக்குகள் கொண்ட 464 குடியிருப்பு கட்டுவதற்கு கட்டிட வரைபட அனுமதி வழங்க பார்வை–2ல் காணும் கடிதத்தின் வாயிலாக தொழில்நுட்ப அனுமதி வழங்கப்பட்டுள்ளதை தொடர்ந்து மேற்படி கட்டிடங்களுக்கு கட்டிட அனுமதி வழங்க கோரி பார்வை–3ல் காணும் கடிதம் வாயிலாக வரைபடங்கள் சமர்ப்பித்துள்ளார்.

மேற்காணும் வரைபடங்கள் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்கண்டுள்ள நிபந்தனைகளுக்கு உட்பட்டு கட்டிடம் கட்டிக்கொள்ள அனுமதி வழங்கி உத்திரவிடப்படுகிறது.

1. இந்த அனுமதி 18.08.2020 ஆம் தேதி முதல் ஐந்து வருடகாலத்திற்கு அதாவது 17.08.2025 தேதி முடிய அமுலில் இருக்கும்.
2. மேற்காணும் 17.08.2025ம் தேதிக்குள் வரி விதிப்பு செய்யப்படவில்லை எனில் புதுப்பித்தல் கட்டணமாக 1½ மடங்கு அங்கீகாரக் கட்டணம் செலுத்தப்பட வேண்டும்.
3. பேரூராட்சி நிலத்தில் அல்லது தெருவில் எவ்விதமான ஆக்கிரமிப்பும் செய்யக்கூடாது.
4. பொதுப்பாதையிலிருந்து 3 மீட்டர் தூரத்தில் நிலையான கட்டிடங்கள் ஏதும் கட்டக்கூடாது. சுற்றுச்சுவர் கட்டிக்கொள்ளலாம் (சுற்றுச்சுவர் 1.8மீ மேற்படாமல்)
5. கட்டிடத்திற்கு அனுமதி பெற்ற இடத்தில் மேற்படி கட்டிடம் கட்டுவதற்கு மண் எடுக்கக்கூடாது
6. அங்கீகாரம் செய்யப்பட்ட பிளானுக்கு எவ்வித மாறுதலும் இல்லாமல் கட்டிடம் கட்ட வேண்டும். மாறுதல் செய்வதாக இருந்தால் முன்கூட்டியே அனுமதி பெற்றிருக்க வேண்டும்.
7. கொடுக்கப்பட்டுள்ள கால அளவுக்குள் கட்டிடம் கட்டி முடிக்கவில்லையானால் அதற்கு (30) முப்பது நாட்களுக்கு முன்னதாகவே மனு கொடுத்து நிர்ணயிக்கப்பட்டுள்ள கட்டணம் செலுத்தி அனுமதிக்கால வரம்பை நீட்டித்துக்கொள்ள வேண்டும். அவ்வாறு அனுமதி பெறாமல் கட்டிட வேலை செய்யக்கூடாது.

06/09/2020

EXECUTIVE ENGINEER
TNSCB, Tirupur Division

8. கட்டிட வேலை நடக்குமிடத்தில் அங்கீகரிக்கப்பட்ட வரைபடத்தின் நகல் ஒன்று வைக்கப்படுவதுடன் பேரூராட்சி அலுவலர் அவர்களின் பார்வைக்கு வேண்டும்போது ஆஜர்படுத்த வேண்டும்.
9. கழிப்பிடம், சாக்கடை, தொட்டி முதலியன முறைப்படி தளம் போடவேண்டும். எளிதாக சுத்தம் செய்ய மார்க்கம் உள்ளதாகவும் இருக்கவேண்டும்.
10. சென்னை சுகாதார சட்டப்பிரிவுகள் 26 மற்றும் 33 விதிகளின்படி அத்தாட்சி பெறாமல் மேற்படி கட்டிடத்தில் குடியேறவோ அல்லது குடிவைக்கவோ கூடாது.
11. கட்டிடம் கட்டி முடித்த அல்லது குடியேறிய 15 தினங்களுக்குள் அவ்விபரம் செயல் அலுவலர் அவர்களுக்கு தெரிவிக்கப்படுவதுடன் கட்டிடத்தின் முடிவான வரைபடம் ஒன்றும் அனுப்பவேண்டும்.
12. தற்போது செலுத்தப்பட்ட தொகை பின்பு குறைவானதென தெரியவந்தால் உடனே மீதித்தொகையை பெரூராட்சியில் செலுத்தவேண்டும்.
13. மழை நீர் சேமிப்புத்தொட்டி அமைக்கப்படவேண்டும்
14. சோலார் கட்டமைப்பு அமைக்கப்படவேண்டும்
15. நீதிமன்ற தடையினை விலக்கிகொள்ள பட்டு தொகை செலுத்த தெரிவிக்கப்பட்டால் உட்கட்டமைப்பு மற்றும் அடிப்படை கட்டமைப்பு வசதி கட்டணம் செலுத்தப்பட வேண்டு என்ற நிபந்தனையில் பேரில் அங்கீகரிக்கப்படுகிறது.
16. சிறப்பு நிபந்தனையாக கட்டிடம் கட்டும்பொழுது மின்கம்பம் இருந்தால் 6 அடி இடைவேளி விட்டு கட்ட வேண்டும்.
17. தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் கட்டிட விதிகள் பிரிவு 17B–ன்படி பேரூராட்சி பகுதிகளில் கட்டப்படும் கட்டிடங்களின் சூரிய ஒளியினை பயன்படுத்தி தண்ணீரை சூடாக்கும் உபகரணம் பொருத்தப்பட வேண்டும்.
18. தேசீய நெடுஞ்சாலையின் விளிம்பில் இருந்து 3 மீட்டர் இடம் விட்டு கட்டிடம் கட்டிக்கொள்ள நிபந்தனையுடன் அங்கீகாரம் வழங்கப்படுறது.
19. பார்வை 1-ல் கண்ட அரசாணையின்படி உள்ளாட்சி அமைப்புகள் கட்டிடம் கட்ட அனுமதிக்கும் நேர்வில் 1% தொகையினை கட்டிடம் கட்டுபவர்களின், கட்டிடம் கட்டுவதற்கான மொத்த தொகையிலிருந்து (Total Estimated Cost of Building or Construction work proposed to be Constructed) பிடித்தம் செய்து அனுப்ப வேண்டும் என்றும், இத்தொகையினை வரைவோலை / காசோலை மற்றும் RTGS / NEFT மூலமாகவும் Secretary, "Manual Workers General Welfare Fund of Tamil Nadu Construction Workers Welfare Board" Chennai. என்ற பெயரில் செலுத்த வேண்டும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே, தமிழ்நாடு குடிசை மாற்று வாரியத்துறை மூலம் கட்டப்படும் அடுக்குமாடி குடியிருப்புக்கான கட்டிட மொத்த மதிப்பீட்டில் 1% தொகையினை மேற்கண்டவாறு செலுத்தி அதன் நகலினை இவ்வலுவலகத்திற்கு அனுப்பி வைக்க வேண்டும்.

செயல் அலுவலர்,
அம்மாபேட்டை பேரூராட்சி,
ஈரோடு மாவட்டம்.

18/03/2020

**இணைப்பு:**

அங்கீகரிக்கப்பட்ட வரைபடம் – 1 நகல்

**பெறுநர்:**

நிர்வாக பொறியாளர்,
தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியம்,
திருப்பூர் கோட்டம், திருப்பூர் – 641 602.

**நகல்:**

வரிவசூலர், அம்மாபேட்டை பேரூராட்சி (கட்டிடம் வேலை முடிவுற்றாலோ, மாற்றியமைத்து கட்டிடம் கட்டினாலோ உடன் அறிக்கை சமர்ப்பிக்கப்பட வேண்டும்)

EXECUTIVE ENGINEER
TNSCB, Tirupur Division



## our services doesn't just end there

### Buying & Selling Services

Property Buying Assistance, Property Selling Support, Market Price Analysis, Owner Outreach and Negotiation.

### Legal & Documentation Services

Certified EC, Patta, legal opinions, property verification, due diligence, litigation solutions, and legal heir certificates.

### Property Development & Approvals

Building plan approvals, construction, layout and sub-division approvals, zone conversion, and occupancy certification.

### NRI & Investment Services

Escrow Services, Rentals, Litigation Solutions, Property Valuation and Property Management

### Compliance & Special Services

Demolition, Vaasthu checks, regularization of unauthorized buildings, and office space solutions.



# empowering your real estate decisions with smart tools

## Property Valuation & Cost Estimation

Guideline Value, Apartment Composite Value, Stamp Duty & Registration Fees Calculator, Building Value Calculator, Capital Gains Calculator, Area Unit Converter, Length Unit Converter

## Ownership, Compliance & Legal Verification

Encumbrance Certificate (EC) Search, Find Your SRO, Temple Property Check, WAQF Property Check, View Patta/Chitta, View FMB, Patta Analyzer, EC Analyzer

## Zoning & Land Use Analysis

Land Use Zone Finder, CRZ Zone Check, Aquifer Zone Check, CBA Check, EWS Check, Road Width Check, Proposed Road Widening Check, FSI Calculator

## Property Documentation & Workflow Tools

Forms & Templates, Document Generator, Document Translation, Dictionary

## Vastu & Property Management Tools

Home Vastu Shastra, Plot Vastu Shastra, Property Management

Verified RealEstate™

We're honored to be part of your real estate journey

3/350/2 Mettukuppam,
OMR Thoraipakkam,
Chennai, India

hello@verified.realestate
+91 9996 12 9996
www.verified.realestate